13.12.2021
அசல் வழக்கு எண்: 299/2014

பி.வா.சா.1 சாட்சி N.குமார் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

ஆரம்பித்த நேரம்–1.00p.m.

கடந்த 5.8.2006ம் தேதி வாதி செலுத்திய ரூ.50000க்கு 1ம் பிரதிவாதி நிறுவனத்தால் வாதி பெயருக்கு கொடுத்த ரொக்க ரசீதின் சான்றொப்பமிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். வாதி, 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு ரூ.2000 செலுத்தியதற்கு வாதி பெயருக்கு கொடுத்த ரொக்க ரசீதின் சான்றொப்பமிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆகும். மதுரை ஸ்ரீ மீனாட்சி மில்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு வாதி M.முருகேசன் அவர்களால் கொடுக்கப்பட்ட ஒப்புதல் உறுதி மொழி பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.3 ஆகும். வாதிக்காக திரு.N.S.கார்த்திகேயன் வழக்கறிஞர் கடந்த 8.3.2010ம் தேதி 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் முதுநிலை பொது மேலாளருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு நகல் பி.வா.சா.ஆ.4 ஆகும். கடந்த 16.5.2012ம் தேதி 1ம் பிரதிவாதி நிறுவனத்திற்காக திரு. D.மலையரசன் அவர்கள் வாதிக்கு அனுப்பிய கடிதம் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.5 ஆகும். மேற்கண்ட பி.வா.சா.ஆ.5 கடிதத்தை வாதிக்கு சார்பு செய்ததை காண்பிக்க கூடிய சான்றொப்பமிடப்பட்ட proof of delivery தபால் துறையின் covering letter உடன் பி.வா.சா.ஆ.6 ஆகும். சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் 5ம் பிரதிவாதியால், 1ம் பிரதிவாதி நிறுவனத்தின் மீதும் மற்றும் 5 நபர்கள் மீது W.P.MD.6182/2008 என்ற நீதிப்பேராணை மனுவின் 3ம் எதிர்மனுதாரரால் தாக்கல்செய்திருந்த மறுப்புரை பி.வா.சா.ஆ.7 ஆகும். மேற்கண்ட பி.வா.சா.ஆ.7 நீதிப்பேராணை நடவடிக்கையில் ஏற்பட்ட இறுதி உத்தரவின் உயர் நீதிமன்றத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.8 ஆகும்.

முடிந்த நேரம் – 1.15p.m.